# அலகு தேர்வு

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

### பாடம் - 7 - கூட்டாண்மைக் கணக்குகள் - சேர்ப்பு

**காலம் : 1.15 நிமிடம்** **மதிப்பெண்கள் : 45**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 × 1 = 5

1. கூட்டாளி சேர்க்கையின் பொழுது சொத்துகளையும், பொறுப்புகளையும் மறு மதிப்பீடு செய்து அவற்றை --------------- பதிய வேண்டியது நியாயமான செயல் முறையாகும்.
   அ) அடக்க விலையில் ஆ) அடக்கத்திலிருந்து தேய்மானம் கழித்த தொகையில்
   இ) உண்மை மதிப்பில் (நடப்பு மதிப்பில்)

2. கூட்டாளி சேர்க்கையின் பொழுது, நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்று செய்யப்படும் கணக்கு -------------
   அ) கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ஆ) நற்பெயர் கணக்கு இ) மறு மதிப்பீடு கணக்கு
3. புதிய கூட்டாளி சேர்க்கையில், பகிர்ந்து தரா இலாபமும், காப்பு நிதியும் பகிர்ந்து கொள்ளப்படுவது -------------
   அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம் இ) முதல் விகிதம்
4. புதிய கூட்டாளி சேர்க்கையில் ----------- கணக்கிடப்படுகிறது.
   அ) ஆதாய விகிதம் ஆ) முதல் விகிதம் இ) தியாக விகிதம்

5. பகிர்ந்து தரா இலாபம் இருப்புநிலைக் குறிப்பின் -------------- பக்கத்தில் தோன்றும்.
   அ) பொறுப்பு ஆ) சொத்து இ) பற்று

## பகுதி --- II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 6- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

6. கூட்டாளிச் சேர்ப்பு என்றால் என்ன?
7. தியாக விகிதம் என்றால் என்ன?
8. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஏன் தொடங்குகிறோம்?
9. மகேஷ், நாகேஷ் என்ற ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் 5 : 4 எனும் விகிதத்தில் இலாப, நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31ஆம் நாள் அன்று, நிறுவனத்தின் ஏடுகளில் காப்பு நிதி ₹. 45,000 உள்ளது. அவர்கள் 2018 ஏப்ரல் 1 அன்று சுரேஷ் என்பவரை 1/3 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். குறிப்பேட்டுப் பதிவு தருக.

10. கமல், விமல் என்ற கூட்டாளிகள் முறையே 4 : 3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அமுல் என்பவரை 1/5 கூட்டுக்குச் சேர்த்தனர். அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக.

11. ஆனந்தன், பாஸ்கரன் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் சந்திரன் என்பவரை 1/3 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக.

12. பொன்மலர், தேன்மொழி என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கனிமொழி என்பவரை 1/6 கூட்டுக்குச் சேர்ப்பதென முடிவு செய்தனர். ஏடுகளில் நற்பெயர் ₹. 60,000 ஆகக் காட்டுகிறது. ஆனால் சேர்ப்பின் பொழுது ₹. 40,000 என மதிப்பிடப்பட்டது. நற்பெயரின் ஒப்புக் கொள்ளப்பட்ட மதிப்புக்கு பதிவு தருக.

## பகுதி --- III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 13 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 3 = 12

13. குவிந்த காப்பு என்றால் என்ன ?
14. நற்பெயர் - எந்த முறையைப் பின்பற்றி சரிக்கட்டுதல் செய்ய வேண்டும்?
15. கூட்டாளி சேர்ப்பின் பொழுது செய்யப்படும் சரிக்கட்டுதல்கள் யாவை?
16. கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு கூட்டாளியை சேர்க்கப்படும் பொழுது, கூட்டாளி பெறும் உரிமைகள் யாது?

17. சுமதி, சுந்தரி என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 எனும் விகிதத்தில் நிறுவனத்தின் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்கின்றனர். சங்கரி என்பவரை புதிய கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளும் பொழுது அவர்களுடைய இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புக்கள் பக்கத்தில் இலாப நட்டக் கணக்கு ₹. 40,000 என குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பேட்டுப் பதிவு தருக.

18. இராமன், இலட்சுமணன் என்ற கூட்டாளிகள் முறையே 4 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். வேலன் என்பவரைச் சேர்க்க முடிவு செய்த பிறகு, பின்வருமாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்தனர்.
    அ) கட்டட மதிப்பை ₹. 50,000 அதிகப்படுத்த வேண்டும்.
    ஆ) ஐயக்கடன் ஒதுக்கு ₹. 500 குறைக்க வேண்டும்.
    இ) இயந்திர மதிப்பை ₹. 15,000, அறைகலன் ₹. 4,000 மற்றும் சரக்கிருப்பு ₹. 10,500 குறைக்க வேண்டும். மறுமதிப்பீட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

19. ரமேஷ், உமேஷ் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.
    31-03-2017 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | வங்கி | 8,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 28,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| கோபு 40,000 | | நிலமும் கட்டடமும் | 70,000 |
| பாபு 30,000 | 70,000 | | |
| | 1,28,000 | | 1,28,000 |

01-04-2017 அன்று ராஜேஷ் என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) நிலம் - கட்டடத்தை 10 % மதிப்பேற்றம் செய்வது.
ii) சரக்கிருப்பை ₹. 4,000 குறைப்பது
iii) கொடுபடா பொறுப்பு ₹. 1,000 உருவாக்குவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.


B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

## பகுதி --- IV

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 × 5 = 20

20. சரண்யா , மாலா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31-03-2009 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹ |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 80,000 | வங்கி | 10,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 20,000 | பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| இலாப நட்டக்கணக்கு | 1,00,000 | சரக்கிருப்பு | 20,000 |
| முதல் கணக்கு:<br>சரண்யா ₹. 40,000<br>மாலா ₹. 30,000 | 70,000 | இயந்திரம் | 40,000 |
| | | நிலம்,கட்டிடம் | 70,0000 |
| | 2,70,000 | | 2,70,000 |

அவர்கள் பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு ஜெயா என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) ஜெயா ₹. 30,000 முதல் கொண்டு வருவது.
ii) நிலம் - கட்டிடம் 10 % மதிப்பேற்றம் செய்வது.
iii) சரக்கிருப்பு மதிப்பை ₹. 3,000 குறைப்பது.
iv) கொடுபடா பொறுப்புக்கு ₹. 2,000 ஒதுக்கு உருவாக்குவது.

**மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகள் ஆகியவற்றைத் தாயாரிக்கவும்.**

21. சோமு, ராவணன் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2018ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 80,000 | வங்கி | 10,000 |
| பொதுக் காப்பு | 30,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| முதல் கணக்குகள் | | இயந்திரம் | 40,000 |
| ராமு 40,000 | | நிலமும் கட்டடமும் | 70,000 |
| ரகு 30,000 | 70,000 | முதலீடுகள் | 30,000 |
| | 2,00,000 | | 2,00,000 |

01-04-2018 அன்று ஆனந்தன் என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) ஆனந்தன் ₹. 30,000 முதல் கொண்டுவருவது.
ii) ஏடுகளில் நற்பெயர் ₹. 20,000 என தோற்றுவிப்பது.
iii) நிலம் - கட்டடத்தை 10 % மதிப்பேற்றம் செய்வது.
iv) சரக்கிருப்பை ₹. 5,000 குறைப்பது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் வங்கி கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

22. கமலா, விமலா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2018 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 70,000 | வங்கி | 10,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 25,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| கமலா 60,000 | | இயந்திரம் | 60,000 |
| விமலா 40,000 | 1,00,000 | நிலமும் கட்டடமும் | 70,000 |
| பொதுக்காப்பு | 10,000 | ரொக்கம் | 20,000 |
| இலாப நட்ட க / கு | 5,000 | | |
| | 2,10,000 | | 2,10,000 |

01-04-2018 அன்று அமலா என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) அமலா ₹. 30,000 முதல் கொண்டுவருவது.
ii) ஏடுகளில் நற்பெயர் ₹. 20,000 என தோற்றுவிப்பது.
iii) நிலம் - கட்டடத்தை 10 % மதிப்பேற்றம் செய்வது.
iv) சரக்கிருப்பை ₹. 2,000 குறைப்பது
v) கொடுபடா பொறுப்பு ₹. 5,000 உருவாக்குவது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

23. குமார், வாலி என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹ |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 25,000 | வங்கி | 15,000 |
| முதல் கணக்கு:<br>குமார் ₹. 70,000<br>வாலி ₹. 30,000 | 1,00,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | | நிலம்,கட்டிடம் | 90,0000 |
| | 1,25,000 | | 1,25,000 |

01-04-2017 அன்று அஜய் என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) அஜய் ₹. 20,000 முதல் கொண்டுவருவது.
ii) நிலம் - கட்டடத்தின் தற்போதைய மதிப்பை ₹. 1.00,000 ஆக கொள்வது.


B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

iii) சரக்கிருப்பை ₹. 2,000 குறைப்பது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

24. காவேரி , பவானி என்ற கூட்டாளிகள் முறையே 65 % , 35 % என்றவாறு இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர்.

31-03-2015 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 25,000 | ரொக்கம் | 2,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 13,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| காவேரி 40,000 | | இயந்திரம் | 8,000 |
| பவானி 30,000 | 70,000 | நிலமும் கட்டடமும் | 50,000 |
| | | நற்பெயர் | 12,000 |
| இலாப நட்ட க / கு | 14,000 | | |
| | 1,22,000 | | 1,22,000 |

அவர்கள் தாமிரபரணி என்பவரை 1/10 பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு கூட்டாண்மையில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) தாமிரபரணி ₹. 30,000 முதல் கொண்டுவருவது.

ii) நற்பெயரின் தற்போதைய மதிப்பை ₹. 15,000 ஆக அதிகரிப்பது.

iii) நிலம் - கட்டடத்தின் தற்போதைய மதிப்பை ₹. 60,000 ஆக கொள்வது.

iv) கொடுபடாமலுள்ள பழுதுபார்ப்புச் செலவுகளுக்கு ₹. 1,000 ஒதுக்குவது.

முதல் கணக்கு மற்றும் புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

**<u>கூடுதல் தகவல்</u>**

மறுமதிப்பீட்டு இலாபம் : காவேரி முதல் க / கு ₹. 5,850

பவானி முதல் க / கு ₹. 3,150